கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
திருமங்கலம்.

2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 10ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.1/2023
மற்றும்
இடைநிலை மனு எண்.2/2023
மற்றும்
இடைநிலை மனு எண்.3/2023
இன்
அசல் வழக்கு எண்.125/2013
* * * *

சுரேஷ் ... மனுதாரர்/ வாதி

/எதிர்/

1. சீதா (இறப்பு)
2. ராமச்சந்திரமூர்த்தி
3. காந்திமதி ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுக்களில் மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், இம்மூன்று மனுக்களில்,

இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த மூன்று மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re-open செய்யவும், மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 18 விதி 17 மற்றும் 151 CPCன் கீழ் வா.சா.1ஐ மீண்டும் recall செய்யவேண்டியும், மனுதாரர்/வாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் 17.02.2004ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்த பத்திரத்தின் நகலை சான்றாவணமாக குறியீடு செய்யவும், இந்த மூன்று மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :-

இந்நிர் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுக்களானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) மனுதாரர்/வாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re-open செய்யவும், மனுதாரர்/வாதி தரப்பில் கட்டளை 18 விதி 17 மற்றும் 151 CPCன் கீழ் வா.சா.1ஐ மீண்டும் recall செய்யவேண்டியும், மனுதாரர்/வாதி தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் 17.02.2004ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்த பத்திரத்தின் ஒளி நகலை சான்றாவணமாக குறியீடு செய்யவும், இந்த மூன்று மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில், இம்மனுக்கள் அசல்வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இம்மனுக்கள் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், இம்மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3) தீர்வு

இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இருதரப்பிலும்

இம்மனுக்களை நிரூபணம் செய்யும்பொருட்டு சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

3.2) மனுதாரர் கூறும் பாகவிஸ்தி ஒப்பந்த பத்திரம் ஆவணமானது ஒளிநகலாக உள்ளது. மேற்படி ஆவணத்தின் அசலை எதிர்மனுதாரர் ஒப்படைக்க வேண்டி IA 493/2022ல் மனு தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணம் எதுவும் இல்லை என்று தெரிவித்ததன்படி, இந்நீதிமன்றத்தில் 01.06.2023ம் தேதி IA 493/2022 மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எனவே மனுதாரர் மேற்படி ஆவணத்தின் ஒளிநகலை அசல் வழக்கில் தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.3) அசல் வழக்கு கடந்த 13 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், அசல் வழக்கானது இருதரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.4) மேலும், அசல் வழக்கானது கடந்த 2013ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், ஒளி நகல்

ஆவணத்திற்கு சட்டப்படியான சாட்சிய வலிமை இல்லாத நிலையிலும், மேற்படி 17.02.2004ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணம் எதுவும் மனுதாரர்-எதிர்மனுதாரர்களுக்கிடையே ஏற்படவில்லை என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்து வரும் நிலையிலும், அசல் ஆவணத்தை மனுதாரர்கள் தாக்கல் செய்யாத நிலையில், அதற்கான சட்டப்படியான காரணம் ஏதும் இல்லாததால், மேற்படி 17.02.2004ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஆவணத்தின் ஒளி நகலை அசல் வழக்கில் ஆவணமாக குறியீடு செய்ய மனுதாரர் கோரும் பரிகாரமானது சட்டப்படியானதாக இல்லை. எனவே, இம்மனுக்களானது அசல் வழக்கை காலம் கடத்தும்விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனுக்களானது நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, மனுதாரர்/வாதி தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re-open செய்யவும், வா.சா.1ஐ மீண்டும் recall செய்யவேண்டியும், அசல் வழக்கில் 17.02.2004ம் தேதியிட்ட பாகவிஸ்தி ஒப்பந்த பத்திரத்தின் நகலை சான்றாவணமாக குறியீடு செய்யவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மூன்று இடைநிலை மனுக்களை தள்ளுபடி செய்வது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மூன்று மனுக்களானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 10.02.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.10 17:09:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.10 17:09:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.1/2023
மற்றும்
இடைநிலை மனு எண்.2/2023
மற்றும்
இடைநிலை மனு எண்.3/2023
இன்
அசல் வழக்கு எண்.125/2013
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 10.02.2026.